**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**அசல் வழக்கு எண்.13/2021**
**CNR NO.TNKR090000132021**

1. முருகேஷ்
2. அங்கம்மாள் ... வாதிகள்

**/எதிர்/**

முருகேசன் ... பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக 24.03.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.M.செந்தில் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பாஸ்கர் அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

தாவா சொத்தினை வாதிகள் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதியோ, அவரது ஆட்களோ இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வாதிகள் தரப்பு வழக்குரையின் சுருக்கம்**

1) 1, 2 வாதிகள் சகோதரர்கள். தாவா சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்ட வீட்டு மனை நிலமாகும். வாதிகளின் குடும்பத்தார் தாவா சொத்தில் தொடர்ச்சியான அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வந்தனர். இதனால் அரசாங்கம் வாதிகளின் தாயார் வீராயி பெயருக்கு 26.10.1994 ல் நில ஒப்படைப்பு செய்து கொடுத்தனர். அதன் சர்வே எண்.526/35 ஆகும். வாதிகளின் தாயார் 18.11.2011 ல் தாவா சொத்து குறித்து எவ்வித ஏற்பாடும் செய்யாமல் இறந்து விட்டார். வாதிகளின் தகப்பனாரும் 16.08.2017 ல் வாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து

விட்டார். எனவே வாதிகள் தாவா சொத்தை வாரிசுரிமை அடிப்படையில் அடைந்து அனுபவம் செய்து வருகின்றனர்.

2) தாவா சொத்தில் கட்டப்பட்டு இருந்த குடிசை வீடானது சமீப காலத்தில் சேதமடைந்து விட்டதால் தாவா சொத்து காலி மனையாக உள்ளது. அதனால் தாவா சொத்திற்கு வீட்டு வரி இரசீது எதுவும் செலுத்தப்படவில்லை. பிரதிவாதி தாவா சொத்தின் அருகாமை நிலத்துக்காரர். அவர் தனது நிலத்தில் சமீபத்தில் கட்டிடம் கட்டினார். வாதியால் தாவா சொத்தில் வீடு கட்ட இயலாததை பயன்படுத்திக் கொண்டு பிரதிவாதி தாவா சொத்தையும் சேர்த்து ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்ட முயற்சி செய்தார். அதை வாதிகள் தடுத்து விட்டனர். இது குறித்து சிந்தாமணிபட்டி காவல் நிலையத்தில் பிரதிவாதிக்கு எதிராக புகார் கொடுத்து பிரதிவாதி தனது அரசியல் பலத்தால் மேற்படி புகாரை விசாரிக்காமல் முடித்து விட்டார்.

3) ஊரில் உள்ளவர்களிடம் வாதிகள் கூறியும் பிரதிவாதி அவர்களது அறிவுரையை ஏற்க மறுத்து விட்டார். நில அளவையர் மூலமாக தாவா சொத்தை அளக்க வாதிகள் முற்பட்ட போது பிரதிவாதி ஆட்சேபனை செய்தார். 16.01.2021ல் பிரதிவாதி தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்த போது வாதிகள் அதை பெரும் சிரமத்துடன் தடுத்தனர். எனவே பிரதிவாதிக்கு எதிராக வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

<u>பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையின் சுருக்கம்</u>

4) வழக்குரையில் தாவா சொத்து அரசுக்கு சொந்தமான வீட்டு மனை என்றும் அதில் வாதிகளின் குடும்பத்தார் நீண்ட காலமாக அனுபவம் செய்து வந்து 1994ல் வாதிகளின் தாயாருக்கு பட்டா கொடுத்ததாகவும், வாதிகள் குடும்பத்தார் அதை தற்போது வரை வாரிசு அடிப்படையில் அனுபவம் செய்து வருவதாக சொல்வதை வாதிகளே நிரூபிக்க வேண்டும். தாவா சொத்திற்கு தென்புறம் பிரதிவாதியின் இடம் உள்ளது என்பதும் அதில் பிரதிவாதிகள் புதியதாக வீடு கட்டி அனுபவித்து வருவதாக சொல்வதையும், தாவா சொத்தை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்த போது காவல் நிலையத்தில் வாதிகள் புகார் கொடுத்ததாக சொல்வதையும், நில அளவையரை தாவா சொத்தை அளக்க விடாமல் பிரதிவாதி தடுத்ததாக சொல்லும் சங்கதிகளை வாதிகளே நிரூபிக்க வேண்டும்.

5) பிரதிவாதிக்கு அவர்களின் நீடனுபோக அனுபவத்தின் அடிப்படையில் அரசு சொத்தை அடமானம் செய்துள்ளது. அடமானம் செய்யப்பட்ட இடத்தில் பிரதிவாதி தனது பழைய கட்டிடத்தை இடித்து விட்டு கெட்டி மெத்தை வீடு கட்டியுள்ளார். பிரதிவாதி எப்போதும் வாதியின் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிக்கவில்லை. வாதிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை விட்டுவிட்டு சம்பந்தம் இல்லாத இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய பொய்யான சங்கதிகளுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென பதிலுரை தாக்கல் செய்துள்ளார்.

6) இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வழக்கு விசாரணைக்காக வனையப்பட்டுள்ளன.

**<u>எழுவினாக்கள்</u>**

| | |
|---|---|
| 1. | Whether the plaintiffs are in possession of the suit property? |
| 2. | Whether the plaintiffs are entitled for the relief of permanent injunction? |
| 3. | To what other relief? |

7) வாதிகள் தரப்பில் 1ம் வாதி முருகேஷ் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்களும், நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் மேலப்பகுதி கிராமம், ஊராட்சி செயலர் அய்யனார் பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, சா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>எழுவினா எண்.1ன் தீர்வு</u>**

**வாதிகள் தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் உள்ளார்களா?**

8) இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வாதிகள் தரப்பில் தாவா சொத்தானது வாதிகளின் தாயார் வீராயி என்பவருக்கு 1994ம் வருடத்தில் அரசால் ஒப்படைப்பு செய்யப்பட்டு அதில் வாதிகளின் குடும்பத்தார் அனுபவம் செய்து வருவதாகவும் மேற்படி தாவா சொத்தில் உள்ள வீடானது சமீப காலத்தில் இடிந்து விட்டதால் தற்போது தாவா சொத்து காலியிடமாக

உள்ளது என்றும் வாதி தரப்பில் வாதிடப்பட்டது. மேற்படி வாதத்தை நிரூபிக்க வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களும், நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9) வா.சா.ஆ.1–சர்வே எண்.526/35 க்கான நில ஒப்படைப்பு நமூனா. மேற்படி ஆவணமானது 26.10.1994 ல் ஆறுமுகம் மனைவி வீராயி என்பவருக்கு சர்வே எண்.526/35 ல் 0.01.0 ஹெக்டேர் நிலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஆவணமானது காலி மனையாக வாதிகளின் தாயாருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் 6 மாத காலத்திற்குள் கட்டிடம் கட்டி முடிக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் மேற்படி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

10) வா.சா.ஆ.2–சர்வே எண்.526 க்கான புல வரைபடத்தின் உண்மை நகல். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், சர்வே எண்.526/35 மற்றும் அதற்கு தெற்கு புறம் சர்வே எண்.526/37 அமைந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. மேற்படி சொத்திற்கு இரு புறங்களிலும் காலி இடம் விட்டு வீட்டு மனை பிரிக்கப்பட்டுள்ளது. தாவா சொத்தின் மேற்குப்புறத்தில் ரோடு அமைந்துள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

11) வா.சா.ஆ.3–வீராயி இறப்பு சான்றிதழ். வா.சா.ஆ.4–மாதிரி வரைபடம். மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் வாதிகளின் தாயார் வீராயி என்பவருக்கு அரசாங்கத்தால் தாவா சொத்தானது நில ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது என்பதும் அவர் 18.11.2011 ல் இறந்து விட்டார் என்பதையும் அறிய முடிகிறது. வாதிகள் தரப்பில் மேற்படி வாதிகளின் தாயாருக்கு ஒப்படைக்கப்பட்ட இடத்தில் குடிசை வீடு கட்டி அனுபவம் செய்து வருவதாக வாதிடப்பட்டது. மேற்படி வாதத்திற்கு ஆதரவாக எந்த ஒரு ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

12) பிரதிவாதி தரப்பில் சர்வே எண்.526/37 பிரதிவாதிக்கு ஒப்படைக்கப்பட்ட இடம் என்பதும் மேற்படி இடத்தில் பிரதிவாதி வீடு கட்டி அனுபவம் செய்து வருவதாகவும் அவர் இடத்திற்கு வடபுறம் உள்ள இடம் காலிமனையாக இருந்து வந்தது என்றும் வாதிடப்பட்டது. பிரதிவாதி தாவா சொத்தினை ஒட்டி தென்புறத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்

என்பதை வாதிகளே தங்களது வழக்குரையிலும், தாவா சொத்து விபரத்திலும் ஒப்புக்கொண்டுள்ளனர். இந்நிலையில் பிரதிவாதி தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்து தாவா சொத்தில் வீடு கட்ட முயற்சித்ததாக வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.

13) வாதிகள் தாவா சொத்தின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதற்கு ஆதரவாக இவ்வழக்கில் எந்தவிதமான ஆவணங்களோ, 3ம் நபர் சாட்சிகளோ தாக்கல் செய்யப்படவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள நிபந்தனையின் அடிப்படையில் வாதிகளோ, அவரது தாயாரோ தாவா சொத்தில் வீடு கட்டி அனுபவித்து வந்தார்கள் என்பதை காட்ட எந்த விதமான ஆவணங்களும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை.

14) வாதிகள் தரப்பில் தாவா சொத்தில் கட்டப்பட்ட வீடானது இடிந்து விட்டதால் வீட்டு வரி தாக்கல் செய்யவில்லை என வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு கூறும் நிலையில் ஏற்கனவே இருந்த வீட்டிற்கு செலுத்தப்பட்ட வரி இரசீதுகளை தாக்கல் செய்திருக்கலாம். ஆனால் வாதிகள் தரப்பில் அவ்வாறு எந்த ஒரு ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வாதிகள் தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறார்கள் என்பதை முறையாக நிரூபிக்கவில்லை என மேற்படி எழுவினாவிற்கு தீர்வு காண்கிறேன்.

**<u>எழுவினா எண்.2 ன் தீர்வு</u>**

**வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?**

15) வாதிகள் தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருவதாகவும், பிரதிவாதி தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்ட முயற்சித்து வருவதாகவும் வாதிடப்பட்டது. ஆனால் மேற்படி வாதத்திற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேலும் பிரதிவாதிக்கு எதிராக சிந்தாமணிபட்டி காவல் நிலையத்தில் வாதிகள் புகார் கொடுத்ததாகவும் இவ்வழக்கின் வழக்கு மூலமாக கூறப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவோ அல்லது மனு இரசீதோ வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

16) மேலும் இவ்வழக்கின் வழக்கு மூலமாக கூறப்பட்டுள்ள 16.01.2021 தேதியிட்ட சம்பவத்தை நிரூபிக்க வாதிகள் தரப்பில் 3ம் நபர் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. பிரதிவாதி தரப்பில் பி.சா.1 ஆக மேலப்பகுதி கிராம ஊராட்சி செயலர் விசாரிக்கப்பட்டுள்ளார். இவர் கதவு எண்.8/49 என்ற வீட்டில் ஆறுமுகம் மகன் முருகேசன் வசித்து வருவதாகவும், மேற்படி வீட்டிற்கு வரி செலுத்தி வருவதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

17) மேலும் முருகேசன் 2013ல் இருந்து தற்போது வரை வரி செலுத்தி வருவதாக சா.சா.ஆ.1 ஆவணத்தை குறியீடு செய்துள்ளார். இந்நிலையில் வாதிகள் தரப்பில் தாவா சொத்தானது காலி இடம் என ஒப்புக்கொண்டுள்ள நிலையில் கதவு எண்.8/49 என்ற வீட்டில் குடியிருந்து வருவதாக சொல்லியுள்ள சொத்திற்கும், தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பதை அறிய முடிகிறது.

18) இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அவர் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். மேற்படி அறிக்கை மற்றும் வரைபடத்தை பரிசீலனை செய்கையில், மேற்கே தேவர்மலை ரோடு உள்ளதாகவும் அதன் கிழக்கு புறம் பிரதிவாதியின் வீடும், அதன் கிழக்குப்புறம் சந்து இருப்பதாகவும், சந்தினை ஒட்டி கிழக்குப்புறம் வாதிகளின் வீடு இருப்பதாகவும் குறிப்பிட்டு வரைபடம் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வரைபடத்தை ஒட்டியே தனது அறிக்கையையும் கொடுத்துள்ளார்.

19) வாதிகள் தங்கள் வழக்குரையில் தாவா சொத்திற்கு தென்புறத்தில் பிரதிவாதியின் வீடு இருப்பதாக கூறியுள்ளனர். ஆனால் நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் வாதிகளின் வீட்டிற்கு மேற்கு புறம் சந்து இருப்பதாகவும், சந்திற்கு மேற்கு புறம் பிரதிவாதியின் வீடு இருப்பதாகவும் கண்டு வரைபடம் தாக்கல் செய்துள்ளார். எனவே வாதிகள் தங்கள் வழக்குரையில் சொல்லியுள்ள சொத்து விபரமே தவறாக உள்ளது என்பதை அறிய முடிகிறது. எனவே வாதிகள் தங்களது சொத்தை முறையான அளவுகள் மற்றும் நான்கெல்லைகள் குறிப்பிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்பதை அறிய முடிகிறது.

20) மேலும் நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையிலும் இது குறித்து மனு சொத்திற்கு வந்த போது சர்வே எண்.526 ல் கண்ட வரைபடத்தின் அமைப்பும், தற்காலிக பூஸ்துதியில் இருக்கும் அமைப்பும் முன்னுக்குப் பின் முரணாக உள்ளது. மேற்படி மனு சொத்துக்கள், எதிர்மனுதாரர் சொத்துக்கள் ஏதும் கிராம நிர்வாக அலுவலர் கணக்கிலோ, அடங்கல் கணக்கிலோ, சர்வேயர் வரைபடத்திலோ எவ்விதத்திலும் பொருத்தமாக இல்லை என தனது அறிக்கையில் கூறியுள்ளார். இதனால் தாவா சொத்தினை முறையாக அடையாளம் காட்ட இயலவில்லை என்றும் அரசாங்கம் கொடுத்த ஒப்படைப்பு நமூனாவில் உள்ள வரைபடத்தின் அடிப்படையில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

21) நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தின் அடிப்படையில் தாவா சொத்தை நீதிமன்ற ஆணையரால் அடையாளம் காண இயலவில்லை என்பதை அறிய முடிகிறது. மேலும் வாதிகளும் தனது வழக்குரை சொத்து விபரத்தில் தவறான சொத்து விபரம் மற்றும் நான்கெல்லைகளை குறிப்பிட்டுள்ளார் என்பதையும் அறிய முடிகிறது. தவறான சொத்து விபரத்தின் அடிப்படையில் வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமானது அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் வாதிகள் தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் உள்ளதை நிரூபிக்காத நிலையில் அவர்கள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என மேற்படி எழுவினாவிற்கு தீர்வு காண்கிறேன்.

**<u>எழுவினா எண்.3 –ன் தீர்வு</u>**

**வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?**

22) வாதிகள் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்துள்ள நிலையில் வாதிகளுக்கு இவ்வழக்கில் கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் இல்லை என முடிவு செய்து மேற்படி எழுவினா எண்.3 ற்கு தீர்வு காண்கிறேன்.

**முடிவாக,**

இவ்வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI Date: 2026.03.27 17:35:03 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**வாதிகள் தரப்பு சாட்சி**

வா.சா.1 முருகேஷ் (1 ம் வாதி)

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

| வரிசை எண். | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 26.10.1994 | ஒப்படைப்பு நமூனா | அசல் |
| வா.சா.ஆ.2 | 26.10.1994 | சர்வே எண்.526 ன் புல வரைபடம் | உண்மை நகல் |
| வா.சா.ஆ.3 | 28.11.2011 | வீராயி இறப்பு சான்றிதழ் | உண்மை நகல் |
| வா.சா.ஆ.4 | – | தாவா மாதிரி வரைபடம் | அசல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சி**

பி.சா.1 – அய்யனார் (மேலப்பகுதி கிராம ஊராட்சி செயலர் )

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் – இல்லை**

**சாட்சி சான்றாவணங்கள்**

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| சா.சா.ஆ.1 | – | 2013–2014, 2019, 2020–2021, 2021–2022, 2022–2023, 2023–2024 ஆண்டுகளுக்கான வீட்டு வரி பதிவேடு | உண்மை நகல் |

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள் :</u>**

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | – | நீதிமன்ற ஆணையர் அறிக்கை | அசல் |
| நீ.ம.சா.ஆ.2 | – | நீதிமன்ற ஆணையர் வரைபடம் | அசல் |

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI
Date: 2026.03.27 17:35:11 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

************************************

**PDM COURT, KULITHALAI**

**FAIR JUDGMENT**

**O.S.No.13/2021**

**D.D.27.03.2026**

**AFT**

********************************